தினமணி

# 'கலை, கலாசாரங்களை பின்பற்றுவது அவசியம்'

பெங்களூரு, டிச. 8: நமது கலை, கலாசாரங்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று, எஸ்-வியாசா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் என்.நாகேந்திரா கேட்டுக் கொண்டார்.

பெங்களூரு ஜெயின் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இசை, கலை, இலக்கியம், கல்வி உள்ளிட்ட துறைகளில் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியில் அவர் பேசியது:

கல்வி என்பது பல விஷயங்களை அறிந்து கொள்வது மட்டுமல்லாது, கற்றவைகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதும், அதன்படி நடந்து கொள்வதுமாகும். மெத்த படித்தவர்களுக்கு கல்வி செருக்கு ஏற்படுவதோடு, தங்களை எல்லோரை விடவும் சிறந்தவர்கள் போல காட்டிக் கொள்கின்றனர். உயர் கல்வி படிப்பவர்கள் நமது கலை, கலாசாரங்களைப் பின்பற்றுவது அவசியம். கல்வியை நாட்டின், தங்களைச் சார்ந்துள்ள மக்களையும் உயர்த்துவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

z